**இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம்**

# ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரிக்கை (EOI)

## ஒப்படை தலைப்பு: முக்கிய திறனைக் கட்டியெழுப்புவதற்காக பிரசுரிப்பதற்கு தயாரான ஆவணங்களை உருவாக்க ஒரு தொழில்நுட்ப எழுத்தாளரை வாடகைக்கமத்துதல்

## ஒப்பந்த இல. ICTA/GOSL/CON/IC/2022/02

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA) என்பது நாட்டின் டிஜிட்டல் பரிவர்த்தனைக்காக மூலோபாயத்தைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக கட்டாயமாக்கப்பட்ட நிறுவனமாகும். இந்த நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமாக ICTA பிரஜைகளுக்கான சேவைகளை வழங்க டிஜிட்டல் தீர்வுகளைச் செயற்படுத்துகின்றது. அதே வேளையில் அரசாங்க அதிகாரிகளின் டிஜிட்டல் கல்வியறிவு, திறமை மற்றும் ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்காக அவர்களை மீளுருவாக்கம் செய்தல் மற்றும் திறன்களை மேம்படுத்துகின்றது. டிஜிட்டல் மாற்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முழு அரசாங்க அணுகுமுறைகள் அடுத்த மூன்று (03) ஆண்டு காலத்தில் அரசாங்கத் துறைக்குள் குறிப்பிடத்தக்க கலாசார மாற்றத்தை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக அரசாங்க செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் ஒரு பிரஜையை மையமாகக் கொண்ட, டிஜிட்டல் முறையில் இயக்கப்படும் மற்றும் விளைவு சார்ந்த கட்டமைப்புக்குள் கணிசமாக உருவாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின் ஒரு முக்கிய பங்கை நிறைவேற்றுவதற்காக ICTA ஒரு தொழில்நுட்ப எழுத்தாளராக அனுபவம் வாய்ந்த ஆலோசகரின் சேவையை பெற விரும்புகின்றது. மற்றும் இதன் மூலம் பணியை மேற்கொள்வதற்கு தகுதி வாய்ந்த தொழில்சார் நிபுணர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடுகளை அழைக்கின்றது. தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து தொடர்புடைய கலைபொருட்களை ஆவணப்படுத்த வேண்டும் மற்றும் ICTA வின் அங்கீகாரத்துடன் வெளியிடுவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் மிக உயர்ந்த தொழில்முறை தரத்தில் உருவாக்க வேண்டும்.

**ஒப்படைக் காலம்:** 06 மாதங்கள்

**தகைமை மற்றும் அனுபவம்:**

| |
|---|
| அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ நிறுவனமொன்றின் தகவல் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் அல்லது இயைபுடைய துறையில் இதற்குச் சமமான தகைமை |
| தொழில்நுட்ப எழுத்து மற்றும் ஆவணப்படுத்தலில் செயல்முறை அனுபவத்துடன் விடயப் பரப்பில் குறைந்தபட்சம் 03 வருட கால அனுபவம் |
| பல்வேறுபட்ட பார்வையாளர்களுக்கான முறைமைத் தேவைப்பாடு விபரக் குறிப்புகள், அறிக்கைகள் மற்றும் நடைமுறைப் பொருட்கள் போன்ற ஆவணங்களை எழுதுவதில் அனுபவம் |
| பயன்பெறுநர்களின் புரிதலை அதிகரிக்கும் புகைப்படங்கள், வரைபடங்கள், வரைபு குறிப்புகள், அமினேஷன் மற்றும் விளக்கப்படங்களின் உருவாக்கம் மற்றும் பயன்பாடு |
| மக்கள் தொடர்பு பிரசாரங்களில் அனுபவம் |
| Microsoft office மற்றும் photoshop, coral draw, Visio என்பவற்றில் அனுபவம் ஆனால் இவைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல. |

ஆர்வமுடைய பிரத்தியேக ஆலோசகர்கள் இதனையொத்த ஒப்படைகள், தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்ப எழுத்துத் திறன்கள் மற்றும் ஏனைய பொருத்தமான / தொடர்புடைய நிபுணத்துவம் ஆகியவற்றை நிரூபிப்பதற்கு தகைமைகள், முன்னைய அனுபவத்தை ஆவண அத்தாட்சியுடன் பின்வருவன உட்பட தேவையான விபரங்களை சமர்ப்பிப்பதன் மூலம் இந்தக் கோரிக்கைக்கு பதிலளிப்பதற்கு கோரப்படுகின்றனர்.

1) சுயவிபரக்கோவை/ சுயவிபரம் (இணையதள CV வடிவத்தை பயன்படுத்தவும்)
2) ஒரு பக்க முகப்புக் கடிதத்தில் குறித்த துறையில் தொடர்புடைய அனுபவம், நிபுணத்துவம் முதலியவற்றை முன்னிலைப்படுத்தவும்.
3) பணியை நிறைவேற்றுவதற்கான அணுகுமுறை மற்றும் வேலைத்திட்டம் (அதிகபட்சம் 5 பக்கங்கள்)
4) எதிர்பார்க்கப்படும் அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த கட்டணம். (ஒட்டுமொத்த தொகை)

"குறிப்பு விதிமுறை" ஆவணங்களை ICTA வில் தற்போது பெற்றுக்கொள்ளலாம். ஆர்வமுடைய ஆலோசகர்கள் மேலதிக விபரங்களை https://www.icta.lk/procurement/ என்ற இணையதளத்திலிருந்து ஆவணங்களை பார்வையிடுவதற்காக தரவிறக்கம் செய்யலாம்.

பிரத்தியேக ஆலோசகர்கள் தேர்வு முறையை பின்பற்றி ஆலோசகர்களின் தேர்வு மற்றும் தொழில்வாய்ப்புக்கான அரச வழிகாட்டலில் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைக்கு அமைய ஆலோசகர் தேர்வு இடம்பெறும். அனைத்து ஆவணங்களும் ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும் என அனைத்து ஆர்வமுடைய ஆலோசகர்களுக்கும் அறிவுறுத்தப்படுகின்றது.

ஆர்வமுடைய ஆலோசகர்கள் procurement@icta.lk என்ற மின்னஞ்சல் மற்றும் +94 11 2369091 என்ற தொலைநகல், +94 11 2369099 என்ற தொலைபேசி வழியாக தொடர்புகொள்வதன் மூலம் ICTA, பெறுகைப் பணிப்பாளரிடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து கோரப்பட்ட தகவல் உள்ளடங்கிய ஆர்வ வெளிப்பாட்டை 2022 ஏப்ரல் 06ஆம் திகதி 15 மணித்தியாலத்திற்குப் பிந்தாமல் தலைவர், மே/பா பெறுகைப் பணிப்பாளர், இலங்கை தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் முகவர் நிலையம், 06ஆம் மாடி, இல. 490, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03, இலங்கை என்ற முகவரிக்கு ஒன்றில் (i) procurement@icta.lk எனும் மின்னஞ்சல் மூலம் அல்லது (ii) நேரில் ஒப்படைத்தல் அல்லது (iii) தபால் மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரத்தியேக ஆலோசகருக்கான ஆர்வத்தை வெளிப்படுத்துதல் - முக்கிய திறனைக் கட்டியெழுப்புவதற்காக பிரசுரிப்பதற்கு தயாரான ஆவணங்களை உருவாக்க ஒரு தொழில்நுட்ப எழுத்தாளரை வாடகைக்கமர்த்துதல்" (ICTA/GOSL/CON/IC/222/02) எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு (CPCD),**
**இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம்,**
**இல. 490, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03**
**இலங்கை**
**தொலைபேசி: +94 11 2369099, தொலைநகல்: +94 11 2369091, www.icta.lk**

**2022 மார்ச் 27ஆம் திகதி.**